துணைவேந்தர்கள் நியமனம்:

தேடுதல் குழுவுக்கு தமிழக அரசு அதிரடி உத்தரவு!

“இனி அறிக்கையை கவர்னரிடம் வழங்க வேண்டாம்”!!

சென்னை, மே. 15

துணை வேந்தர்கள் நியமனம் குறித்த அறிக்கையை இனி கவர்னரிடம் வழங்க வேண்டாம். தமிழக அரசிடமே வழங்குங்கள் என தேடுதல் குழுவுக்கு தமிழக அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழ்நாட்டில் 22 அரசு பல்கலைக்கழகங்கள் உள்ளன. இவற்றில் 11 பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்கள் நியமிக்கப்படாமல் அப்பதவி காலியாக உள்ளது.

பல்கலைக்கழக துணை வேந்தர்கள் நியமனத்தில் தமிழக அரசுக்கும், கவர்னர் ஆர். என். ரவிக்கும் இடையே ஏற்பட்ட மோதல் போக்கு இருந்து வந்தது. அதன் காரணமாக இந்த பல்கலைக்கழங்களின்துணைவேந்தர்பதவி நிரப்பப் படாமல் காலியாகவே இருந்து வந்தன.

எனவே, பல்கலைக் கழகங்களின் வேந்தர் பதவியை கவர்னரிடம் இருந்துமுதலமைச்சருக்கு மாற்றி வழங்கும் மசோதா தமிழக சட்டசபையில் நிறை வேற்றப்பட்டது. பின்னர் அவற்றின் ஒப்புதலுக்காக கவர்னர் ஆர்.என். ரவியிடம் அனுப்பப் பட்டது.

அதற்கு அவர் ஒப்புதல் வழங்காமல் கிடப்பில் போட்டார்.இதைஎதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கில் தமிழக அரசுக்கு சாதகமாக தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதன்படி தமிழக பல்கலைக்கழகங்களின் வேந்தராக இனி முதலமைச்சர் செயல்படுவார் என அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து நிரப்பப்படாமல் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்களை நியமனம் செய்யும் நடவடிக்கையில் தமிழக அரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. இதற்காக 9 பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்கள் தேடுதல் குழுவை நியமித்துள்ளது.

ஏற்கனவே தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் , அண்ணா மலை பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் ஆகிய 4 பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர் பதவி காலியாக உள்ளது.

இவற்றிற்கு துணை வேந்தர் தேடுதல் குழு ஏற்கனவே அமைக்கப்பட்டது. அதில் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கு 2022 அக்டோபர் 19–ஆம் தேதியும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு 2024 டிசம்பர் 9–ஆம் தேதியும், அண்ணா பல்கலைக்கழகத்திற்கு 2024 டிசம்பர் 13–ஆம் தேதியும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு 2025 ஜனவரி 10–ஆம் தேதியும், இக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

ஆனால் கவர்னர் ஆர். என். ரவிக்கும், தமிழக அரசுக்கும் இடையே துணை வேந்தர் நியமனத்தில் மோதல் போக்கு இருந்தது. இந்த பல்கலைக் கழகங்களுக்கு நியமிக்கப்பட்ட தேடுதல் குழுவில் 3 பேர் இடம் பெற்றிருந்தனர்.

இவர்களுடன் பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரை செய்த 4 – ஆவது நபர் நியமனம் செய்வதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதன் காரணமாக துணை வேந்தர்கள் நியமிக்கப்படாமல் அப்பதவி பல வருடங்களாக காலியாக கிடக்கின்றது. இதனால் இங்கு சரிவர பணிகள் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.

தற்போது உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களின் வேந்தராக தமிழக முதலமைச்சர் உள்ளார். எனவே தற்போது மேற்கண்ட 4 பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர் நியமனம் செய்ய தலா 3 பேர் கொண்ட தேடுதல் குழுக்களைதமிழக அரசுநியமித்துள்ளது. அண்ணா பல்கலைக்கழகதுணைவேந்தர் தேடுதல் குழுவில் அரியானாவில்உள்ளகுருஷேத்ரா பல்கலைக்கழகமுன்னாள் துணை வேந்தர் கைலாஷ் சந்திர சர்மா, முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி பி.டபிள்யூ.சி டேவிதார், சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் ஜி. திருவாசகம் ஆகியோர் இடம் பெற்றனர்.

அண்ணாமலை பல்கலைக் கழக துணை வேந்தர் தேடுதல் குழுவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் கே. பிச்சுமணி, முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி கே. அலாவுதீன் மற்றும் சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் திருவாசகம் ஆகியோர் உள்ளனர்.மதுரை காமராஜர்பல்கலைக்கழகதுணை வேந்தர் தேடுதல் குழுவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் கே. பிச்சுமணி, பேராசியர் கே. ஜோதி சிவஞானம், பேராசிரியர் கே. ஏ. மணிக்குமார் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக துணை வேந்தர் தேடுதல் குழுவில் பல்கலைக்கழக மானியக் குழுவைச் சேர்ந்தபேராசிரியர்சுஷ்மா யாதவா, மன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி அலாவுதீன், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டி. பத்மநாபன் ஆகியோர் உள்ளனர்.

இந்த துணை வேந்தர் தேடுதல் குழு தனது அறிக்கையை தாக்கல் செய்ய வருகிற ஆகஸ்டு 13–ஆம் தேதி வரை கால அவகாசத்தை நீட்டித்துள்ளது. மேலும் இந்த அறிக்கையை இனி கவர்னரிடம் (ஆர்.என்.ரவியிடம்) தாக்கல் செய்ய வேண்டாம். இந்த அறிக்கையை தமிழக அரசிடம் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

கோவில்பட்டி பங்களாத் தெரு சார்பில் அன்னை பத்ரகாளி அம்மன் கோவில் சித்திரைபொங்கல்திருவிழாவை முன்னிட்டு முளைப்பாரி ஊர்வலம்நடைபெற்ற போது எடுத்த படம்.

பொள்ளாச்சி சம்பவத்தில்

எடப்பாடி பழனிசாமி வெட்கி தலைகுனிய வேண்டும்!

தி.மு.க. கடும் விமர்சனம்!!

சென்னை, மே 15

பொள்ளாச்சி சம்பவத்தில் எடப்பாடி பழனிசாமி வெட்கி தலை குனிய வேண்டும் என திமுக கடுமையாக விமர்சித்துள்ளது.

இது குறித்து முரசொலியில்வெளியான கட்டுரையில் கூறப்பட்டுள்ளதாவது, பொள்ளாச்சி சம்பவத்தில்குற்றம் சாட்டப்பட்ட 9 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு வந்துள்ளது. பழனிசாமியின் அ.தி.மு.க. ஆட்சி மறைக்க நினைத்த குற்றத்துக்கு நியாயமான, சரியான தண்டனை தரப்பட்டுவிட்டது. இதில் அருளானந்தம் என்பவர் அ.தி.மு.க. மாணவரணி செயலாளராக இருந்தார். ஊழல்மணியான வேலுமணியின் கைத்தடியாக வலம் வந்துள்ளார். வேலுமணியுடன் பல்வேறு விழாக்களில் பங்கெடுத்துள்ளார். அதேபோல், பொள்ளாச்சி ஜெயராமனுடன் இருக்கிறார். பல்வேறு நிகழ்ச்சிகளில் ஜெயராமனுடன் இருந்துள்ளார். ஜெயராமன் பேட்டி கொடுக்கும் போதெல்லாம் அவரோடு அருளானந்தம் உள்ளார். அ.தி.மு.க.வின் சுவரொட்டிகளில் அருளானந்தம் படம் இடம்பெற்றுள்ளது. அதேபோல் பாபு, ஹெரன்பால் ஆகிய இருவரும் பொள்ளாச்சி ஆச்சிபட்டி ஊராட்சித் தலைவரும் அ.தி.மு.க. பிரமுகருமான ரெங்கநாதனுடன் நெருக்கமாக இருந்தவர்கள். பழனிசாமி முதல மைச்சராக வலம் வந்த காலத்தில், (2019) பொள்ளாச்சியில் ஒரு மாபெரும் கொடூரம் நடந்தது. ஒரு நாள், இருநாள் அல்ல, பல மாதங்களாக நடந்தது. எல்லா வற்றையும் டி.வி.யில் வந்தால் மட்டுமே தெரிந்து கொள்ளும் பழனிசாமிக்கு பொள்ளாச்சி சம்பவம் டி.வி.யில் வராததால் தெரியவில்லை. பல மாதங்களாக பல பெண்களை மிரட்டி – பாலியல் வன்கொடுமை செய்து – அதனை வீடியோவாகப் பதிவு செய்து – அவர்களை மிரட்டும் செயலை ஒரு கும்பல் செய்து வந்தது. அந்தக் கும்பலில் அ.தி.மு.க. நிர்வாகிகள் இருந்தார்கள். அந்த அ.தி.மு.க. நிர்வாகிகள், அன்றைய அமைச்சர்கள் சிலருக்கு நெருக்கமாகவும் இருந்தார்கள். ஆட்சி நம்ம ஆட்சி, போலீஸ் நம்ம போலீஸ் என்ற மிதப்பில் இந்தக் கும்பல் இந்த அட்டூழியத்தைத் தொடர்ந்து செய்து வந்தது. இதை பழனிசாமியின் போலீசும் கண்டு பிடிக்கவில்லை. பழனிசாமி காலத்தில் உளவுத்துறையை பார்த்தவர்களும், கண்டுபிடிக்கவில்லை. பழனிசாமியின் நாற்காலியைக் காப்பாற்றுவதில் தான் அவர்கள் மும்முரமாக இருந்தார்கள்.

பாதிக்கப்பட்ட ஒரு பெண் இந்தக் கும்பலின் மிரட்டலுக்கு அடிபணியாமல் துணிச்சலாக வெளியில் வந்தார். அ.தி.மு.க. ஆட்சியில் காவல்துறை உயரதிகாரியைச் சந்தித்து புகார் சொன்னார். அவர் அதனை கண்டுகொள்ளவில்லை. பின்னர் பொள்ளாச்சிகிழக்குகாவல்நிலையத்துக்குப் போய் புகார் சொன்னார். யார்மீது புகார் சொல்லப்பட்டதோ, அவர்கள் தரப்புக்கே இந்தச்செய்தி போனது. பாதிக்கப்பட்ட பெண்ணின் அண்ணன் தாக்கப்பட்டார். விவகாரம் பெரிதாக ஆனபிறகு வேறு வழியில்லாமல் பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலையத்தில் வழக்குப் பதிந்தார்கள். சபரிராஜன், சதீஷ், வசந்தகுமார், திருநாவுக்கரசு ஆகியோர் கைது செய்யப்பட்டார்கள். இதில் சம்பந்தப்பட்ட அ.தி.மு.க. பிரமுகர்கள் காப்பாற்றப்பட்டார்கள். அ.தி.மு.க. ஆட்சியில் முறையான நீதி கிடைக்காது என்பதால், ‘சி.பி.ஐ.க்கு மாற்றியாக வேண்டும்’என்றுதி.மு.க. உள்ளிட்ட கட்சிகள், அமைப்புகள், கோரிக்கை வைத்தது. சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவு போட்டு, இந்த விவகாரத்தை மறைக்க நினைத்தது அ.தி.மு.க. அரசு. ஆனால் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் படி சி.பி.ஐ.க்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது. அந்த சி.பி.ஐ.யிடம் ஆவணங்களை ஒப்படைக்காமல் காலதாமதம் செய்தார்கள். நீதிமன்றம் கடுமையான உத்தரவுகளை போட்ட பிறகுதான் கொடுத்தார்கள். சி.பி.ஐ. இந்த வழக்கை விசாரித்த பிறகு தான் அ.தி.மு.க. பிரமுகர் அருளானந்தம் 2021 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். அருளானந்தம், ஹெரன்பால் ஆகியோர்கைது செய்யப்பட்ட பிறகுதான் அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டனர். 2019 முதல் 2021 வரை இவர்களை காப்பாற்றி வைத்திருந்தார் பழனிசாமி. பொள்ளாச்சியில் இந்தக் குற்றச் சம்பவம் லேசாக வெளியில் தெரிய வந்த துமே அன்றைய முதலமைச்சர் பழனிசாமியிடம் நிருபர்கள் கேட்டார்கள். ‘இதுக்கெல்லாம் என்ன ஆதாரம் இருக்கிறது? ஆதாரம் இருந்தால் கொடுங்கள், சும்மா யாரும் எதையும் சொல்லலாம்’ என்று சொன்னவர் தான் இந்த பழனிசாமி. இந்த விவகாரத்தில் போலீஸ் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று மிரட்டியவர் அ.தி.மு.க. பிரமுகர்பார் நாகராஜன். அன்றைய அமைச்சர் வேலுமணியின் பேரைச் சொல்லி போலீஸை மிரட்டினார். இந்தத் தகவலை தி.மு.க. தலைவர் அம்பலப்படுத்திய பிறகுதான் பார் நாகராஜனை அ.தி.மு.க.வை விட்டு நீக்கினார்கள். தன்னைக் கட்சியை விட்டு நீக்கிய மறுநாளே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்குப் போய் நின்று கொண்டு துணிச்சலாகப்பேட்டி கொடுத்தார் பார் நாகராஜன். பழனிசாமி ஆட்சியில் பாலியல் குற்றவாளிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வாசலில் நின்று பேட்டி கொடுக்கும் அளவில் சட்டம் ஒழுங்கு சந்திசிரித்தது. உண்மைக் குற்ற வாளிகளைநாட்டுக்குஅடையாளம் காட்டுவேன், யாரும் தப்ப முடியாது என்று 4.4.2021 அன்று கோவையில்உரையாற்றியதி.மு.க. தலைவர் குறிப்பிட்டார். இதோ அடையாளம் காட்டி தண்டனையும் பெற்றுத் தந்து விட்டார்கள்.இந்த வழக்கில் அரசுத் தரப்பில் 48 சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவரும் பயமின்றி சுதந்திரமாக சாட்சி சொல்லிஇருக்கிறார்கள்என்று சி.பி.ஐ. தரப்பு அரசு வழக்கறிஞர் சுந்தரமோகன் பேட்டி அளித்துள்ளார். இந்த பாதுகாப்பை வழங்கியது தி.மு.க. ஆட்சியே. அ.தி.மு.க.வைச் சார்ந்த குற்றவாளிகளைப் பாதுகாக்க முயற்சித்த பழனிசாமிக்கு மானமிருந்தால் வெட்கித் தலைகுனியட்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது .

சென்னையில்

மென்பொருள் ஊழியர் வீட்டில் 60 சவரன் நகை கொள்ளை!

சென்னை, மே.15

சென்னை ஈ. சி. ஆர். சாலை கொட்டிவாக்கம் லக்ஷ்மண பெருமாள் தெருவை சேர்ந்தவர்ஓய்வு பெற்ற மென்பொருள் ஊழியர் மகேஷ் குமார் இவரது மனைவி அலமேலு.

இவர்களது இரு மகளுக்கு திருமணம் நடைபெற்று, அவரவர் குடும்பத்துடன் வசித்து வருகின்றனர்.

மகேஷ் குமார் – அலமேலு தம்பதியினர் தனியாக வசித்து வருவதால் தனது மூத்த மகள் ஐஸ்வர்யா மூலம், காவலாளி பணிக்கு நேபாளநாட்டை சேர்ந்த ரமேஷ் என்பவரை சேர்த்துள்ளனர்.

காவாலாளி ரமேஷ், அவரது மனைவி பினிதா மற்றும் இவர்களது மூன்று வயது குழந்தையுடன், தங்கி வீட்டு வேலை செய்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் மகேஷ் குமார், அலமேலு தம்பதியினர் வேலூரில் உள்ள காவேரிப்பாக்கம் என்ற ஊரில் குலதெய்வ கோயிலுக்கு சென்றவர். இரவு வீடு திரும்பிய பொழுது வீட்டில் காவலாளி மற்றும் பணிப்பெண் இல்லாததால் வீட்டுக்குள்நுழைந்தபோது பின் பக்க கதவு உடைக்கப்பட்டு இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்.மேலும் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது பீரோவில் வைக்கப்பட்டிருந்த 60 சவரன் தங்க நகை கொள்ளையடிக்கப்பட்டது தெரியவந்துள்ளது. இதையடுத்து நீலாங்கரை காவல் நிலையத்தில் மகேஷ் குமார். புகார்அளித்தார். வழக்குப் பதிவு செய்த போலீசார், காவலாளி ரமேஷ் அவரது மனைவி பினிதா ஆகிய இருவரையும் தேடி வருகின்றனர்.

தூத்துக்குடியில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடத்தை கனிமொழி எம்.பி. திறந்து வைத்து குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார். அருகில் அமைச்சர் கீதா ஜீவன், கலெக்டர் இளம்பகவத் ஆகியோர் உள்ளனர்.

சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் நடக்கிறது:

தமிழீழ இனப்படுகொலைக்கு மே 18-ல் நினைவு அஞ்சலி!

வைகோ அழைப்பு!!

சென்னை, மே. 15–

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

உலக வரலாற்றில், உலகின் பல இடங்களில் நடைபெற்ற இனப்படுகொலைகளில் 2009 ஆம் ஆண்டில் இலங்கைத் தீவில் சிங்கள பேரினவாத அரசு உலக வல்லரசு நாடுகளிடம் சக்தி வாய்ந்த ஆயுதங்களை வாங்கிக் கொண்டு முப்படைகளையும் ஏவி கோரமான தமிழீழ இனப்படுகொலை நடத்தியது. அதில் தமிழர்களுக்கும், தமிழ்ப் பெண்களுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைகளை நினைக்கும்போதே நமது நெஞ்சம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறது.

தற்போது தமிழர் தாயகத்தில் 90 ஆயிரம் இளம் விதவைகள் இருக்கிறார்கள். ஐ.நா. சபை தலைவராக இருந்த பான்கி மூன், இலங்கைத் தீவில் நடைபெற்ற படுகொலைகளைப் பற்றிய ஆராய மார்சுகி தாரீஸ்மென் தலைமையில் ஒரு குழுவை ஐ.நா. சார்பில் அனுப்பினார்.

யுத்தத்தின் நிலவரம் இப்படி இருக்க, தமிழகத்தில் 2009 ஜனவரி 29 ஆம் தேதி அன்று சென்னை கொளத்தூரில் வசித்து வந்த முத்துக்குமார், மத்திய வருமானவரித்துறை அலுவலகத்திற்கு முன்பு தலை முதல் கால் வரை பெட்ரோலை ஊற்றி நெருப்பை படற வைத்து, தமிழக இளைஞர்களும், மாணவர்களும் ஈழத் தமிழர்களைக் காக்க வேண்டும். தீக்குளித்து கருகிப்போன என் உடலை அதற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்ற மரண சாசனத்தை தன் அருகிலேயே போட்டுவிட்டு, தீயின் தணலுக்கு இரையானான். வரிசையாக 19 தமிழர்கள் தீக்குளித்து மடிந்தனர்.

முருகதாஸ் என்ற ஈழ இளைஞர், ஜெனிவாவில் உள்ள ஐ.நா.வின் மனித உரிமை கட்டடத்திற்கு முன்பு தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்தார்.

நமது தொப்புள் கொடி உறவுகளான ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க இந்திய அரசு முன்வரவில்லை என்பதோடு, தமிழர்களை அழிப்பதற்கு ஆயுத உதவி செய்தது. தமிழகத்தில் ஈழ உணர்வுள்ள மக்கள் அனைவரும் கொந்தளித்தனர்.

மே17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி அவர்கள் ஆண்டுதோறும் சென்னை கடற்கரையில் ஆயிரக்கணக்கில் தமிழர்களைத் திரட்டி, மடிந்த ஈழத்தமிழர்களுக்காக நினைவஞ்சலி சுடர் ஏற்றும் கடமையைச் செய்து வருகிறார். ஒவ்வொரு ஆண்டும் எமது மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் கரங்களில் மெழுகுவர்த்தி ஏந்தி நினைவஞ்சலியைச் செய்து வருகிறது.

இந்த ஆண்டும் வரும் 18 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று சென்னை பெசன்ட்நகர் கடற்கரையில் மெழுகுவர்த்தி சுடர்களை ஏந்தி வீரத் தியாகிகளான ஈழத்தமிழர்களுக்கு நினைவஞ்சலி புகழ் வணக்கம் செய்ய திட்டமிட்டுள்ளார்.

தமிழ் உணர்வாளர்களும், ஈழத் தமிழ் பற்றாளர்களும், மறுமலர்ச்சி தி.மு.க. கண்மணிகளும் 18 ஆம் தேதி மாலை 4 மணிக்கெல்லாம் பெசன்ட் நகர் கடற்கரைக்கு வருவதற்கும், கட்சி சார் பற்ற ஈழத் தமிழ் உணர்வாளர்கள் பெருமளவில் அதில் பங்கேற்க வேண்டும் என்றும் நான் இருகரம் கூப்பி வேண்டுகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

அசாம் அமைச்சரவை முடிவு:

நிருபர்களுக்கு ரோபோ பேட்டி!

கவுகாத்தி, மே.15

ரோபோக்களை பயன்படுத்துவதில் அசாம் மாநில அரசு முனைப்பு காட்டி வருகிறது. ‘அங்கிதா’ என்ற ரோபா செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் இயங்குகிறது. இது பற்றிய விவரங்களை அசாம் முதல்வர் ஹிமந்த விஸ்வ சர்மா தெரிவித்தார்.

அசாம் அமைச்சரவை கூட்டம் முடிந்தவுடன் நிருபர்களுக்கு ரோபா அங்கிதா பேட்டி அளித்தது ஊடங்களில் வைரலாகி வருகிறது.தேயிலைத் தொழில் தொடங்கப்பட்டு 200ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி ஒவ்வொரு தேயிலை தொழிலாளிக்கும் தலா ரூ.5,000 அளிக்கப்படும் என்ற தகவல் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

மேலும் பல முக்கிய அறிவிப்புகளையும் வெளியிட்ட ரோபோ அங்கிதா கேள்விகளுக்கு உடனுக்குடன் சுவாரசியமாக பதில் அளித்தது

இது நிருபர்களை இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்தி விட்டது.

இனப்படுகொலை துயர நாட்களில்

ஈழமக்களுக்கு நீதி கிடைக்க மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்துவோம்!

அ.வியனரசு அறிக்கை!!

சென்னை, மே.15

தமிழ்த் தேசத் தன்னுரிமைக் கட்சித் தலைவர் அ.வியனரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

உலகில் பல நாடுகளில் வாழும் சிறுபாண்மைத் தேசிய இனங்களில் எந்த நாட்டு தேசிய இனத்திற்கும் நேராத அளவுக்கு ஒரு இனம் அழித்தொழிக்கப்பட்ட வரலாறு என்பது இலங்கையில் தமிழீழ மண் முள்ளிவாய்க்காலில் 2009 இதே மே திங்கள் 17,18,19 நாட்களில் நமது தமிழ்த் தேசிய இனத்திற்கு நடந்தேறிய கொடுமைக்கும் இனப்படுகொலைக்கும் உள்ளாக்கி 50 ஆயிரம் தமிழீழ தமிழ் மக்களைக் கொன்றொழித்தது சிங்கள இனவெறி ராணுவம்.

இந்த இனப் படுகொலை மாதத்தில் ஒவ்வொரு தமிழனும் அங்கே நீதிக்காகவும் விடுதலைக்காகவும் ஏங்கி நிற்கும் நமது தொப்புள் கொடி உறவுகளுக்கு என்ன விடை அளிக்க போகிறோம்? என்பதே ஈழம் மற்றும் புலம் பெயர் தமிழர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

கடந்த கால தவறானது,கசப்பான அனுபவங்களைக் கடந்து இந்திய ஒன்றிய அரசு தமிழர்களுக்குத் தனி நாடு கிடைத்திட ஆதரவு

தருமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டுமாய் கோவை கொடிசியாவிலும் விழுப்புரம் மாவட்டம் செஞ்சியிலும் மிக பெரிய அளவில் இனப்படுகொலை வீரவணக்கக் கூட்டங்களை நடத்தவிருக்கும் தமிழக வாழ்வுரிமைக் கட்சி, நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசிய கட்சிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

எட்டுக்கோடி தமிழர்கள் வாழும் இந்த நிலத்தில் இருந்து எழும் ஒவ்வொரு குரலும் ஒரு மிகப்பெரிய தாக்கத்தை, மாற்றத்தை உறுதியாக ஏற்படுத்தும். நம்முடைய இன உணர்வு வலிமையால் அவர்களை அரவணைக்க, ஆக்கங்கள் புரிய முடியும் என்கிற இதய சுத்தியோடும், உணர்வோடும் தமிழீழ உறவுகளுக்கு நீதியும் விடுதலையும் கிடைக்கும் வரைத் துணை நிற்க,தமிழ்த் தேசிய பேரினம் எக்காலத்திலும் மறக்க இயலாத மே திங்கள் 18 ஆம் நாளில் மீண்டும் உறுதி ஏற்போமாக.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

வனத்துறை அதிகாரிகள் 2 பேர் உயிரிழப்பு!

டூவீலர் மீது பஸ் மோதியது!!

ஊத்தங்கரை,மே.15–

மத்தூர் அருகே டூவீலர் மீது கர்நாடக அரசு பஸ் மோதியதில் வனத்துறை அதிகாரிகள் 2 பேர் பரிதாபமாக இறந்தனர்.

தேன்கனிக்கோட்டையை சேர்ந்தவர் சோலைக்கவுண்டர்.

இவரது மகன் கார்த்திகேயன் (32). வனத்துறையில் ரேஞ்சராக பணியாற்றி வந்தார். பேர்னாம்பேட்டையை சேர்ந்தவர் மோகன். இவரது மகன் திவாகர் (25). இவரும் வனத்துறையில் அதிகாரியாக பணியாற்றி வந்தார். இவர்கள் இருவரும் இருசக்கர வாகனத்தில் ஊத்தங்கரையில் இருந்து கிருஷ்ணகிரியை நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

கொடமாண்டபட்டி அருகே சென்றபோது கர்நாடக மாநிலத்தை சேர்ந்த அரசு பேருந்தும் இருசக்கர வாகனமும் எதிர்பாரத விதமாக நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இதில் இருசக்கர வாகனத்தில் வந்த 2 வனத்துறை அதிகாரிகளும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இதுகுறித்து மத்தூர் போலீசார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

VTM விஜயபுரி
பதிவு அலுவலகம்: கூலக்கரை, விருதுநகர்.
CIN : L17111TN1946PLC003270
இணையதளம் : www.vtmill.com தொலைபேசி : 0452-2482595

அறிவிப்பு

செபி (SEBI) நிபந்தனைகள் 2015ம் (பட்டியலிடும் தேவைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள் 29 மற்றும் 47க்கு இணங்க இக்கம்பெனியின் இயக்குநர்கள் கூட்டம் 29.05.2025, வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு தியாகராசர் மில்ஸ் வளாகம், கப்பலூர், மதுரை-625 008 இல் உள்ள தலைவர் அலுவலகத்தில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்தக் கூட்டம் 31.03.2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் வருட இறுதிக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து அங்கீகரிப்பதற்காகக் கூட்டப்படுகிறது. இந்த அறிவிப்பு, பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளம் www.bseindia.com இல் உள்ளது.

இடம்: கூலக்கரை, விருதுநகர்.
நாள்: 13.05.2025

கா.பிரியதர்ஷினி
கம்பெனி செயலாளர்

தமிழ்நாடு அரசு

நீலகிரி மாவட்டம், கேத்தி தேர்வு நிலை பேரூராட்சி

ந.க.எண். 186 / 2025 | **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** | **நாள்: 14.05.2025**

கேத்தி தேர்வு நிலை பேரூராட்சியில் சிறப்பு நிதி திட்டம் **(Special Fund)** 2025-2026ம் ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.258.00 இலட்சம் மதிப்பீட்டில் கேத்தி பேரூராட்சி காபிதாலம் முதல் கீழ் ஓடையரட்டி, சாலமூர் சாலை, கேத்தாரை முதல் பொறையரட்டி சாலை, இந்திராநகர் நுந்தளாமட்டம் சாலை, மேல் ஓடையரட்டி சாலை, சோகத்தாரை தார்ச்சாலை மேம்பாடு செய்தல் பணி செய்திட ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

1) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in மற்றும் http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களும் பெறலாம்.

2) ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :

அ)	முன் கலந்தாய்வு கூட்டம்	13.06.2025 காலை 11.00 மணி
ஆ)	ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	16.06.2025 மாலை 3.00 மணி வரை
இ)	ஒப்பந்தப்புள்ளி திறத்தல்	16.06.2025 மாலை 3.30 மணி

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

செயல் அலுவலர்,
கேத்தி தேர்வு நிலை பேரூராட்சி, நீலகிரி மாவட்டம்.

செ.ம.தொ.இ / 2272 / ஒப்பந்தப்புள்ளி /2025